DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.144/2025**

Prosecution witness **PW.4 (LW.4)**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Ram Kumar | | Caste | : |
| Father Name | : Rathinam | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : 38 |
| Time | : | | | |

**(Accused absent. Petition filed and allowed for accused. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **29.07.2026**

**29.07.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது வெலிங்டன் பாரஸ்ட் டேவில் வசித்து சிவில் இன்ஜினியராக தொழில் செய்து வருகிறேன். 25.06.2025 ம் தேதியில் மதியம் நேரம் ஞாபகமில்லை, நான் என்னுடைய காரில் சேலாஸிலிருந்து குன்னூருக்கு வந்துகொண்டிருந்தேன். எனக்கு முன்பு வழக்கில் இறந்து போன நபரின் ஜூபிடர் இருசக்கர வாகனம் சென்றுகொண்டிருந்தது. அப்போது எதிரே வந்த ஸ்விப்ட் காரில் அதன் ஓட்டுனர் சற்று மது அருந்தியிருப்பது போன்று தெரிந்தது. மேலும் அந்த கார் முழுவதுமாக வலதுபக்கமாக ஏறி இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. அதில் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் 30 அடி பள்ளத்தில் தூக்கி வீசப்பட்டார்.

2. நாங்கள் உடனே கீழே பள்ளத்தில் இறங்கி பார்த்தோம். ஒரு அரை மணி நேரம் அவர் கிடைக்கவே இல்லை. அந்த வழியில் வந்தவர்கள் அனைவரும் இறங்கி பார்த்தார்கள். அதில் இருசக்கர வாகனத்தில் வந்தவருக்கு கை எலும்பு, கால் எலும்பு, நெஞ்சு எலும்பு ஆகியவைகள் உடைந்து தொங்கியது. ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து அது வருவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதால் எனது மாருதி 800 வாகனத்திலேயே மேற்படி காயம்பட்டவரை குன்னூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம்.

3. மருத்துவமனைக்கு வந்த பிறகு காயம்பட்டவரின் குடும்பத்திற்கும் போலிசாருக்கும் தகவல் தெரிவித்தோம். போலிசார் வந்தவுடன் நான் என்ன நடந்தது என கூறினேன். மேற்படி ஸ்விப்ட் காரை ஓட்டிய ஓட்டுனர் தற்போது நீதிமன்றத்திற்கு வந்திருந்தால் என்னால் நிச்சயமாக அடையாளம் காட்டியிருக்க முடியும். அந்த ஸ்விப்ட் கார் கேரளா மாநில பதிவெண் கொண்டதாகும். இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தவரை அவரது குடும்பத்தார்கள் கோயம்புத்தூருக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்லும் வழியில் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.